லோகநாதன்
இன்ஸ்ரிரியூட்
(MAIN)
34, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்,
★ I.C.M.A ★ I.A.A.
★ A.C.C.A.
★ Chartered Prelim
(தனி பாடங்களும்)
ஆரம்பம் :
2-4-80
விபரங்களுக்கு :
நேரில் / தபாலில்

பக்கங்கள் 8

ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 22 பங்குனி 12 ஜ-அவ் 7 இதழ் 44
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-3 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980-3-25
PERIODICALS DIVISION
LIBRARY

இன்று
அதிக இராக்கியானது.
குறைந்த செலவில்
கூடிய பயணம் செய்யக்
கூடிய
குடும்ப வாகனம்.
பல்க்கன்
ஸ்கூட்டர்கள்
இம்மாத இறுதியில் வரு
கின்றன ஏமாற்றத்தை
தவிர்க்க இன்றே
'புக்' பண்ணி விடுங்கள்
பல்க்கன் ஏஜென்சி
யாழ்ப்பாணம். போன்: 685

# ஈரானிய ஷாவுக்கு எகிப்தில்

# நிரந்தர புகலிடம்!

## அதிபர் சதாத் வழங்கினர்

(கெய்ரோ)

**ஈரானின் முன்னாள் மன்னர் ஷா, எகிப்தில் நிரந்தரமாக தங்கியிருப்பார் என்று, எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத நேற்று அறிவித்தார்.**

ஈரானிய ஷா, நேற்று பனமாவிலிருந்து ராணுவ ஹெலிகாப்டர் மூலமாக இங்குவந்து சேர்ந்தபொழுது, அவரை எகிப்திய உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து ஷா எகிப்திய இராணுவ ஆஸ்பத்திரி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சகல பாதுகாப்புகளுடன் அங்கு அனுமதிக்கப்பட்டார்.

ஷாவின் எகிப்திய விஜயம் குறித்து அதிபர் அன்வர்சதாத் நேற்று கருத்துத் தெரிவிக்கையில் ஈரானிய ஷா எகிப்தில் நிரந்தரமாக தங்கியிருப்பார் என்றும் அவருக்குப் போதுமான பாதுகாப்புகளை தமது அரசாங்கம் வழங்குமென்றும் கூறினர்.

**ஈரானிய அமைச்சர் புது அறிவிப்பு**

ஈரானிய ஷா எகிப்துக்குச் சென்றதைத் தொடர்ந்து, ஈரானிய வெளிநாட்டமைச்சர் நேற்று வெளியிட்ட அறிக்கையில், ஷா, பனமாவுக்குத் திருப்பி அனுப்பப்படுவாரானல், பணயக் கைதிகளாகவிருக்கும் 49 அமெரிக்கர்களும் ஆளும் புரட்சிவாத மன்றத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், இத்திட்டமும், 24 மணிநேரத்துக்குள் செயல்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

[முன்வந்த செய்தி 6ம் பக்கம்]



## சாயி பகவான் நிகழ்த்திய அற்புதம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்திகள் தொண்டர்களுக்கு நேற்று முன் தினம் அற்புதம் நிகழ்ந்தது!

திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்து பயிற்சி பெற்ற யாழ். மாவட்ட பகவான் ஸ்ரீசத்யசாயி சேவாசமித்திகள் தொண்டர்கள் முன்னிலையில், நேற்றுமுன்தினம் காலை ஏழரை மணியளவில் பகவான் நிகழ்த்திய அற்புதம், அங்கு கூடிநின்ற அடியார்களை மெய்மறக்கச் செய்து, ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தி, பகவானே நேரில் தரிசனமளித்துஆசீர்வதித்த பேரின்பசூழ்நிலையை உருவாக்கிவிட்டது!

யாழ். மாவட்ட பகவான் ஸ்ரீ சத்யசாயிசேவா சமித்திகளின் தொண்டர்கள், கடந்த சனிக்கிழமை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் கூடி, அடுத்தநாள் பிற்பகல் வரை அங்கு தங்கிநின்று, பயிற்சி நெறிகளில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கிணங்க, பயிற்சித் திட்டத்தின்படிகடந்தஞாயி

(8ம் பக்கம் பார்க்க)

# இளைஞர் பேரவை மாநாடு

## ஆகஸ்டில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர் பேரவையின் தேசிய மகாநாடு எதிர்வரும் ஆகஸ்மாதம் மட்டக்களப்பில் நடைபெறும் என்று தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மாவை சேனதிராசா விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது,

"தமிழ் இளைஞர் பேரவையால் ஊர் ஊராக எடுத்துச் சென்று விற்கப்பட்டுவரும் தமிழ்ஈழ உற்பத்திகளை குறிப்பாக கைத்தறி ஆடைகளை தமிழர்வாழும் தொகுதிகள் தோறும் ஒவ்வொரு மாதமும் குறித்த கிழமைகளில் தொடர்ந்து விற்பனை செய்வதென்று பேரவை தீர்மானித்துள்ளது.

தமிழ்இளைஞர் பேரவையின் இவ்வியக்கத்திற்கு மக்கள் பெரும்ஆதரவும், ஊக்கமும் நல்கிவருகின்றனர். எதிர்வரும் புத்தாண்டு தினத்தில் புங்குடுதீவிலும், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும் கைத்தறி ஆடைகளை விற்பனை செய்வதற்கு பேரவையினர் ஒழுங்குகளை மேற்கொண்டுவருகின்றனர்'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (கொ

## முன்னாள் அமைச்சர் சரஸ்வதி இந்திரா காங்கிரஸில்

[புதுடில்லி]

தமிழக முன்னாள் அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி நேற்று இந்திராகாங்கிரஸில் சேர்ந்துகொண்டார்.

தமிழக அரசில் சமூகசேவைகள் அமைச்சராகவிருந்த செல்வி பி. டி. சரஸ்வதி அண்மையில் அ. இ. அ. தி. மு. கழகத்திலிருந்து ராஜினாமா செய்திருந்தார்.

நேற்று இங்கு, பிரதமர் திருமதி இந்திராகாந்தியையும் மற்றும் நிதியமைச்சர் ஆர். வெங்கட்ராமன், விவசாய ஸ்டேட் அமைச்சர் ஆர். வி. சுவாமிநாதன் ஆகியோரையும் சந்தித்ததைத்தொடர்ந்து இந்திராகாங்கிரஸில் சேர்ந்துகொண்டதுபற்றி அறிவித்தார்.

## விபுலானந்த இசைக் கல்லூரி

[கொழும்பு]

தவத்திரு விபுலானந்தர் பெயரில், இசைக்கல்லூரி ஒன்று அமைக்கும் முயற்சியில் பிராந்திய அபிவிருத்தி, இந்து சமய விவகார அமைச்சு ஈடுபட்டுள்ளது,

தற்காலிகமாக மட்டக்களப்பு சிவானந்தவித்தியா

(8-ம் பக்கம் பார்க்க)

SANSO

குறைந்த செலவு
நிறைந்த பயன்...

'சன்ஸோ' ஜப்பானிலிருந்து இறக்குமதிசெய்யப்பட்ட நீரிறைக்கும் யந்திரம்

ரூபா 1500/-க்கு இப்போது
வழங்கப்படுகிறது...

★ வீட்டுப் பாவனைக்கு உகந்தது
★ வீட்டுப்பாவனை மின்சாரத்தில் இயங்குவது.
★ சுலபமாக இயக்கக்கூடியது.
★ ஒருமணி நேரத்தில் 1000 கலன் நீரை இறைக்கும் சக்திகொண்டது.
★ வீட்டுத் தோட்டங்களுக்கு நீர்ப்பாய்ச்சச் சிறந்தது.
★ நாள் முழுதும் தொடர்ந்தியங்கும் தன்மையானது.

இப்போது உங்கள் தேவைகளை உறுதிப்படுத்த... விரையுங்கள்-

கல்கி சன்ஸ்
147, ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7711
தந்தி: 'ஸ்ரீராம்'

## புகைப்படக்கலைஞரின் காமரா ஆயுதமுனையில் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

இரு இளைஞர்கள் பயங்கர ஆயுதங்களைக் காட்டி, புகைப்பட பத்திரிகையாளர் ஒருவரைப் பயமுறுத்தி, அவர் வைத்திருந்த 2000 ரூபா பெறுமதியான புகைப்படக் கருவிகளை கொள்ளையடித்துச் சென்ற சம்பவமொன்று, நேற்றுமுன்தினமிரவு நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவம் நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக, இரவு, 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டியைச் சேர்ந்த புகைப்படப் பத்திரிகையாளர் திரு எஸ் கதிரவேலுவின் புகைப்படக் கருவிகளையே இளைஞர்கள் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

திரு. கதிரவேலு, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ளஒருவரது வீட்டில் புகைப்படங்களை எடுத்துவிட்டு பருத்தித்துறை வீதியில் வந்துகொண்டிருக்கையில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக இரு இளைஞர்கள் இவரை இடைமறித்து 'இந்தப் பையில் என்ன இருக்கிறது'' என்றனராம் ''கமிரா'' என்று பதிலளித்ததும் ஆயுதத்தைக் காட்டி ''சத்தம்போடக் கூடாது'' என்று கூறி கமிராவைப் பறித்துக்கொண்டோடினராம்.

இக் கொள்ளைச் சம்பவம் பற்றி அறிந்த யாழ் பொலிசார் கொள்ளையரைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

[கெ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய சுவேகா டீலக்ஸ் மொபட் மோட்டார் சைக்கிள் (சொக்கப்சோபர் ஸ்பீடோ மீட்டர் போன்ற உபகரணங்கள் இணைத்தது). கலனுக்கு 350 கி. மீற்றர் ஓடக்கூடியது காலை 8 தொடக்கம் 4 வரை பார்வையிடலாம். 28, மெயின் வீதி, யாழ்ப்பாணம்.

5288

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு முன்பாக இரண்டு கடைகள் கட்டிக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும்: கே. ஆர். கந்தசாமி அண் கோ, 69/1, பசார் வீதி, வவுனியா.

5296

## WANTED

Vacancies exists for immediate employment for the post of Storekeepers.

1. Household & Hardware Dept.
2. Farming & Fishing Dept.

Applicants for Storekeeper for each of the above Departments should have at least five years Working knowledge of the Subjects they are required to handle. Applicants Should provide a security of Rs. 5000/- and will be paid a salary of Rs. 600/- inclusive of E.P.F. Apply Autos Ltd, Jaffna. 5289

## பட்டினசபை, சங்கானை

# கேள்வி அறிவித்தல்

### பஸ் நிலையத்திற்கு மேற்குப் புறமாக

# 3 கடைகளை நிர்மாணித்தல்

சங்கானைப் பட்டினசபை எல்லைக்குள் மேற்காட்டிய இடத்தில் 3 (மூன்று) கடைகளைக் கட்டுவதற்கான அரக்கு "சீல்" வைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலம் 1980 ஏப்பிரல் 10-ந் திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசினர் இலாகா, உள்ளூராட்சி சபை, அரசாங்க கூட்டுத்தாபனம் ஆகிய ஏதாவது ஒன்றில் கட்டிட வேலைகளுக்குரிய 50,000/-க்கும் அதற்கு கூடுதலான தொகைக்கும் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மீளப் பெறக்கூடிய வைப்புப்பணம் ரூபா 250/-ம் மீளப் பெறமுடியாத கேள்விப் பத்திரப் பணம் ரூபா 25/- செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். பணம் செலுத்தியதற்கான ரசீத்தையும், பதிவு செய்தமைக்கான பத்திரத்தையும் சமர்ப்பித்து 7-4-80-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவைப்படின் வழமையான வேலை நேரங்களில் கீழே ஒப்பமிட்டவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**இராசா. தணிகாசலம்,**
விசேட ஆணையாளர்,
சங்கானைப் பட்டணம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சங்கானைப் பட்டணம்,
சங்கானை,
20-3-80. (5295)

# "கல்வியில் சாதனை புரிவது போன்று அபிவிருத்தியிலும் நிலைநாட்ட மாணவர் முன்வரவேண்டும்"

## பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் அழைப்பு

(மட்டக்களப்பு)

"கல்வியில் சாதனை நிலைநாட்டுவது போன்று அபிவிருத்தியிலும் மாணவ சமுதாயம் சாதனை நிலைநாட்டமுன் வரவேண்டும்" என்று பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை வேண்டுகோள் விடுத்தார்.

க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் சிறந்த சித்தி பெற்ற பதினொரு மாணவர்களைக் கௌரவித்து கல்வி இலாகாவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட இவ்விழா வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. யோ முத்துராஜா தலைமையில்புனித சிசிலியா பெண்கள் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்,

"இன்று கல்வியில் சாதனை நிலைநாட்டிய மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுகிறார்கள். அதேபோன்று நமது பிரதேச அபிவிருத்தியில் அக்கறைகொண்டு மாணவர்கள் சாதனை நிலைநாட்டமுன் வரவேண்டும்.

"நான் கடந்த கால் நூற்றாண்டு காலமாய் மட்டக்களப்பிற்கு வளாகம் ஒன்று அவசியமென்பதை உணர்ந்தேன். அன்றைய சூழ்நிலையில் அது நிறைவுபெறவில்லை. எனது இருபத்தைந்தாண்டு கனவு நிறைவுபெறப்போகிறது. இவ்வருடத்தில் மட்டக்களப்பு வளாகம் வந்தாறு மூலையில் சகல வசதியுடன் அமையும்" என்றார்.

இவ்வைபவத்தில் மத்திய கல்லூரி அதிபர் திரு. பிரின்ஸ் காசிநாதர், சிசிலியா பாடசாலை அதிபர் வண. சகோதரி தியோப்பின், மிக்கேல் கல்லூரி அதிபர் திரு. சா. இ. கமலநாதன் உட்பட பலர் உரையாற்றினர். (கு)

**பொ. காங்கேயன்,**
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
கொக்குவில்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84 அ- பிரிவுகள் 524, 532)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கலட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வைத்திலிங்கம் நடராசா பெண் கௌசலா என்னும் கௌசலாதேவி என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர் வைத்திலிங்கம் நடராசா, கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 3506

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1980ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
**பொ. பாக்கியநாதன்,**
பதிவாளர்.

1980-ம் ஆண்டு பங்குனி மாதம் 6-ம் நாளாகிய இன்று திகதியிடப்பட்டது.

5161

# பொன்னாலைக்கு உப தபால் நிலையம்

(பண்டத்தரிப்பு)

பொன்னாலையில் உப தபால் நிலையம் ஒன்றை நிறுவுவதற்குத் தபால், தந்தி தொடர்புகள் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

பொன்னாலைக் கிராம மக்கள் தங்கள் பகுதியில் உப தபால நிலையம் ஒன்றைத் நிறுவித் தருமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு தா திருநாவுக்கரசுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். இதனை அடுத்து திரு. திருநாவுக்கரசு தபால் அமைச்சுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததை அடுத்து இப் புதிய உப தபால் நிலையம் நிறுவப்படவுள்ளது. (அ)

# "லோக்தள் தலைவர் சரண்சிங் சர்வாதிகாரி"

## -- ராஜ்நாராயண்

புதுடில்லி மார்ச் 24

லோக்தள் கட்சித் தலைவர் திரு. சரண்சிங் பேராசைக்காரர் என்றும் சர்வாதிகாரியென்றும் லோக்தள் கட்சியின் நிர்வாகத் தலைவர் திரு ராஜ்நாராயண் குற்றம் சாட்டியுள்ளார்.

திரு. ராஜ்நாராயண் இது தொடர்பாகதிரு சரண்சிங்க்கு எழுதியுள்ள கடிதத்தில் "அரசியல் வாக்குறுதிகளை நழுவவிட்டு விட்டீர்கள். உங்களுக்கிருக்கும் பேராசை காரணமாக எதேச்சாதிகாரமாக நடந்து வருகிறீர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளையில் நேற்று மாலை புதுடில்லியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் திரு. ராஜ்நயராயண் பேசுகையில், "லோக்தள் கட்சியின் நிர்வாகப் பொறுப்புகள் திரு. சரண்சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது என்றும் தானே தொடர்ந்து நிர்வாகத் தலைவராக இருந்து வருவதாகவும் கூறினார். (கு)

# மருந்துகள் விநியோகம்

[பண்டத்தரிப்பு]

சுகாதாரத் திணைக்களத்தின் யாழ்ப்பாண மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இவ்வருட முதலாம் சுற்றாயத்திற்கான மருந்து வகைகளை யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளுக்கும் அரசினர் மத்திய மருந்தகங்களுக்கும் கடந்த வாரம் தொடக்கம் வான் மூலம் நேரடியாகக் கொண்டு சென்று விநியோகம் செய்து வருகின்றனர். [அ]

# விஞ்ஞானக் கல்வி வேண்டும்

(உடுப்பிட்டி)

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் கடந்த ஏழு வருட காலமாகப் பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படாது வருவதாகவும், 6ப் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையிலான சுமார் 600மாணவர்கள் விஞ்ஞானக் கல்வியைப் பெற முடியாத நிலையில் இருந்து வருவதாகவும் இக் கல்லூரி அபிவிருத்திச் சங்கம் கவலை தெரிவித்துளது

இது சம்பந்தமாக இவ்வபிவிருத்திச் சங்கத் தூதுகோஷ்டி ஒன்று உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கத்தையும், வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகரையும் சந்தித்து விஞ்ஞான ஆசிரியரின் அவசியம் பற்றி வலியுறுத்தியுள்ளது. (க)

# பொருட்காட்சி

[யாழ்ப்பாணம்]

"புதிய கல்விமுறையின்படி ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக இருப்பார்கள். மாணவர்கள் தாமே கல்வியைக் கற்கவும், அறிவைப்பெறவும், சமூக உணர்வை வளர்க்கவும் உதவுகின்றார்கள்"

அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒன்றிணைந்த பாடத்திட்டப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசிய வேலணை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மற்றும் பலரும் உரையாற்றினர். (கொ-கு)

# தந்தைசெல்வா வெற்றிக் கேடயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் அண்மையில் அமைக்கப்பட்ட தமிழ் யூனியன் விளையாட்டுக் கழகம் தந்தை செல்வா ஞாபகார்த்த வெற்றிக்கேடய கிரிக்கட்மென்பந்து சுற்றுப்போட்டி ஒன்றை நடாத்தவுள்ளது.

இந்நினைவுக் கேடயத்தை யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு. வெ. யோகேஸ்வரன் அன்பளிப்புச் செய்யவுள்ளார். [கு]

# பங்குனி உத்தரம்

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீச்சர ஆலயபங்குனி உத்தர விழாவும் மகாசங்காபிஷேகமும் இம்மாதம் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமைநடைபெறவுள்ளது.

அன்று அதிகாலை அடியார்கள் பாலாவியில் தீர்த்தக் காவடி எடுப்பார்கள். அதைத் தொடர்ந்து வழமைபோல் பூசை ஆராதனைகளும், பின பாலாவிப் பிள்ளையார் கோவிலில் இருந்து அடியார்கள் பால் காவடி எடுப்பார்கள். சங்காபிஷேகமும். பூசைகளும் இடம் பெறும். (கொ)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## தவறிவிட்டது

சென்ற வெள்ளிக்கிழமை இரவு யாழ் —பருத்தித்துறை பஸ்ஸில் திறப்புக்கள் அடங்கிய 'பாக்' தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாடு காரியாலயத்தில் சு. கனகசபாபதியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

5297

## விற்பனைக்கு

### 22 ஸ்ரீ 4765 மொறிஸ் லொறி,
### 33 ஸ்ரீ 1507 ஒஸ்ரின் A 55 வான்

ஆகிய இரண்டு வாகனங்கள் விற்பனை சம்பந்தமாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 1980 ஏப்ரல் மாதம் 3-ம் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

### த பிறின்ஸ் கம்பனி

249 C, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7680

முன்னேற்பாட்டின்படி வாகனங்களைப் பார்வையிடலாம்.

வவுனியா தெற்கு, தமிழ் பிரிவு,
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வவுனியா

### "இஸ்சுஸ் லொறி பகிரங்க ஏல விற்பனை 16-04-1980"

22/7964 இலக்க இஸ்சுஸ் லொறி சங்க வளவில் 16-04-80ல் காலை 10-00 மணிக்கு நடைபெறவிருக்கும் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும். ஏலவிற்பனையில் பங்கு பற்றுபவர்கள் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 1000/- செலுத்தல் வேண்டும். பணம் கட்டுபவர்களே ஏலத்தில் பங்கு பற்றத் தகுதியுடையவராவர்.

மேற்படி லொறியை ஏல விற்பனையில் பெறுபவர் அன்று இறுதியாக கேட்கப்படும் பெறுமதியின் மூன்றிலொரு பகுதியை உடனடியாகச் செலுத்திப் பின் ஒரு கிழமைக்குள் மிகுதிப் பணத்தையும் செலுத்தி லொறியை சங்க வளவில் இருந்து அப்புறப்படுத்துதல் வேண்டும்.

லொறியை சங்க வேலை நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை பார்வையிடலாம்

ச. சுப்பிரமணியம்,
தலைவர்.

வ. தெ. த. பி. ப. நோ. கூ. சங்கம்,
வவுனியா.

5298


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

துவக்குக்குள்ள பயம் அது சுடுபட்ட பின் போய்விடும். அதன் பிணிப்பு வரவர இறுகுகிறது. எனினும் அதுவொரு பிணிப்பாய் உணரப்படுகிறதில்லை.

---மகாத்மாகாந்தி

# யாழ்.மாவட்டத்தில்சிமெந்து விலை நிர்ணயிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சீமெந்து வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடைசெய்யும் நோக்குடன் பாழ்ப்பாண மாவட்டத்தில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் பாவனையாளர் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் சீமெந்தின்விலை வட பகுதியில் ஏற்றுமதி இறக்குமதிச் செலவுக் கேற்ப இடத்திற்கிடம் வேறுபட்ட தாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று யாழ் செயலகத்தில் யாழ் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விலைக்கட்டுப்பாட்டுப் பிரதி ஆணையாளர், கட்டிடக் கூட்டுத்தாபனம், சலுசலமுகாமையாளர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தால் ஒரு பக்கெற்றுக்கு 75 ரூபா என்று குறிக்கப்பட்ட விலையிலும் பார்க்க எந்தெந்த இடத்தில் என்னென்ன விலைக்கு சிமெந்து விற்கலாம் என மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதன் விபரம் வருமாறு:-

தெல்லிப்பழையிலும் சுன்னாகத்திலும் ரூபா 78-65 சதம் அளவெட்டியிலும், மல்லாகத்திலும் ரூபா 78-75 சதம் பண்டத்தரிப்பில் 78-80 சதம், மானிப்பாய், சங்கானை, அச்சுவேலியில் 78-90 சதம். நல்லூரில் 79 ரூபா, நீர்வேலியிலும் 79 ரூபா 10 சதம், கட்டைவேலி, நெல்லியடியில் 79 ரூபா 15 சதம், கைதடியில் 79 ரூபா 20 சதம், காரைநகர், பருத்தித்துறை, புலோலியில் 79 ரூபா 20 சதம், சாவகச்சேரியில் 79 ரூபா 40 சதம், வேலணையில் 79 ரூபா 50 சதம், கொடிகாமத்தில் 79 ரூபா 60 சதம், ஊர்காவற்றுறையில் 79 ரூபா 70 சதம், புங்குடுதீவில் 79 ரூபா 80 சதம், பளையில் 80 ரூபா, பரந்தனில் 80 ரூபா 70 சதம், கிளிநொச்சியில் 80 ரூபா 90 சதம், பூநகரியில் 81 ரூபா, நெடுந்தீவில் 81 ரூபா 25 சதம் யாழ்ப்பாணத்தில் 79 ரூபா 05 சதம்.

இதை நடைமுறைப்படுத்துவதென சமூகமளித்திருந்தோர் உறுதியளித்துள்ளனர்.

(கொ-அ)

## மக்கள் கருத்து

### தலைமைப்பதவியை ஏற்கவில்லை

14 2-80 வியாழக்கிழமை "ஈழநாடு" பத்திரிகையில் வெளியிடப்பட்ட எனது கடிதத்தின் ஒரு பகுதிக்கு திரு. அ. அமிர்தலிங்கம் 19-2-80 ல் வெளியிட்ட விடயங்களுக்கு எனது மறுப்பினைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

அமரர் ஜி. ஜி ஒரு பொழுதும் கூட்டணியின் அங்கத்தவராக இருக்கவில்லை. அங்கத்தவராக ஒருவரை ஒரு கட்சி ஏற்பதானால் அவர் விண்ணப்பம் செய்திருக்கவேண்டும்; அங்கத்துவப் பணம் செலுத்தியிருக்கவேண்டும். அமரர் ஜி ஜி கூட்டணியில் அங்கத்தவராவதற்கு ஒரு பொழுதும் விண்ணப்பிக்கவில்லை. அங்கத்தவராக இல்லாத ஒருவர் தலைவராக முடியாது.

காங்கிரஸ் கட்சியின், அதன் அங்கத்தவர்களின் சம்மதம் பெறாமல் பொதுச்சபையின் அங்கிகாரம் பெறாமல் சிலர் தன்னிச்சையாகவே கூட்டணியில் சேர்ந்திருந்தனர். கூட்டணியின் தலைமைப் பதவியை ஏற்பதாக இருந்தால் அமரர் ஜி ஜி. கட்சியின் சம்மதத்தைக் கட்டாயம் கோரியிருப்பார். ஏற்காதபடியால்தான் அவர் கோரவில்லை.

வட்டுக்கோட்டை மகாநாட்டுக்கு முன்னும் பின்னும் அமரர் ஜி. ஜி ஒரு பொழுதும் கூட்டணிக் கூட்டங்களுக்குத் தலைமைதாங்கியதுமில்லை; அதில் கலந்துகொண்டதுமில்லை. இது ஒன்றேபோதும் ஜி. ஜி கூட்டணியில் சேரவில்லையென்று நம்புவதற்கு.

தாங்கள் செலுத்திய அஞ்சலி அமரர் ஜி. ஜி. கூட்டணியை ஏற்றுக்கொண்டதன் பிரதிபலிப்பு என்று அமிர்தலிங்கம் கூறுவது அர்த்தமற்றதொன்றாகும். அவ்வாறாயின் சிங்களத் தலைவர்களின் மறைவின்போது இவர்கள் செலுத்தும் அஞ்சலியைக்கொண்டு அதுவும் அவர்கள் கூட்டணியை ஏற்றுக்கொண்டதன் பிரதிபலிப்பு என்று சொல்ல முன்வருவாரா?

மாநகரசபை மண்டபத்தில் ஜி. ஜி நினைவுதினக் கூட்டத்தை அமரர்பால் உண்மையான அன்பு கொண்டவர்கள், வெற்றியிலும் தோல்வியிலும் அவர் உடன் இருந்தவர்கள் கொண்டாடினார்கள். இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு தாம் அத்திகதியில் கொண்டாட முடியவில்லையென்று சொல்லித் தமிழினத்தை ஏமாற்ற முடியாது.

சி. சுப்பிரமணியம்
நாவலர் லேன்,
கொக்குவில்.

### கிளிநொச்சியில் பொருட்காட்சி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சிகல்விவட்டாரப் பொருட்காட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை கிளிநொச்சி கனிட்ட வித்தியாலயத்தில் கிளிநொச்சிவட்டாரக் கல்வியதிகாரி திரு. மா சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பிரதம விருந்தினராகவும், வடமாநில கல்வியதிபதி திரு. தி. மாணிக்கவாசகர் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(கொ-கு)

## தவக்கால நற்சிந்தனை

உன் சிலுவையைச்சுமந்து..

இயேசு பாரமான சிலுவையை கரங்களில் ஏற்று தோள்மீது வைக்கிறார். அவர் சுமக்கவேண்டிய சிலுவை. ஏனெனில் அவர் நம்முடைய பாவங்களை, குற்றங்களை தன் மீது ஏற்றுக்கொண்டார். அந்தச் சிலுவை வழியாகத்தான் இயேசு மீட்பைப்பெற்றுத் தந்தார்.

ஆம், அன்பனே உன் சிலுவை மீட்புத்தரக்கூடியது. உன் துன்பம் மீட்புத்தரக்கூடியது. உன்மேல் சுமத்தப்பட்ட சிலுவையை உதறி எறிந்துவிட்டு நிலையற்ற உலக இன்பத்தை நாடிச் செல்லாதே. அங்கு உனக்கு அனைத்தும் கிடைக்கலாம். ஆனால் உன் இறைவன் கிடைக்கமாட்டார். ஏனெனில் வாழ்க்கையின் சிலுவையை ஏற்றுக்கொள்ள விரும்பாத எவனும் சிலுவை சுமந்துசெல்லும் இறைவனைக் காணமுடியாது.

உன் வாழ்கைச் சிலுவையை சுமந்துசெல். சிலுவைகள் நோயாக, தோல்வியாக, எதிர்பார்ப்புகள் கைகூடாமல், நீதி-உண்மைக்காக வாழத்துணியும் பொழுதுவரும் இன்னல், இழப்புக்கள், அவப்பெயர்கள் வழியாக உன்வாழ்வில் வரலாம். இச்சிலுவையை நீ சுமக்கும் பொழுது சிலுவை சுமந்துசெல்லும் இயேசுவோடு செல்கிறாய்! வாழ்கிறாய்!!

—வண. மேரி பஸ்ரியன் அடிகள்

## "அரசாங்க உத்தியோகத்தரின் கையில் அடிமைவிலங்கு பூட்டப்பட்டுள்ளது"

### சேவைநலன் பாராட்டு விழாவில் பண்டிதர்

(யாழ்ப்பாணம்)

"அரசாங்க உத்தியோகத்தரின் கைகளில் அடிமை விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. தகுதி, திறமை ஆகியன இருந்தும்கூட தொடர்ந்தும் அடிமையாக வாழவிரும்பாத அதிபர் திரு. தி. நடராசா இளம் வயதிலேயே அந்த விலங்கை உடைத்தெறிந்து சுதந்திரபுருடனாக வாழ்விரும்பி அப்பதவியில்இருந்து ஒய்வு பெற்றுள்ளார்."

இவ்வாறு கரம்பன் சண்முகநாத மகாவித்தியாலய அதிபர் திரு தி. நடரர்சா அரச சேவையிலிருந்து ஓய்வுபெறுவதையிட்டு நடைபெற்ற சேவைநலன் பாராட்டுவிழாவில் பேசிய ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கூறினார்.

இவ்வைபவம் சுருவில் கிராம முன்னேற்றச்சங்க மண்டபத்தில் திரு. வ.மா, தவயோகராசா தலைமையில் நடைபெற்றது.

சுருவில் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வைபவத்தில் பண்டிதர் இரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"ஊர்காவற்றுறை தொகுதியிலே பிறந்த பட்டதாரி அதிபர் ஒருவர் இத்தொகுதியிலேயே அதிபராகக் கடமையாற்றினார் என்றால் அப்பெருமை திரு. நடராசாவையேசாரும். இத்தொகுதியில் பிறந்து இத்தொகுதியிலேயே கடமையாற்றிய ஒரேஒரு அதிபர் இன்று ஓய்வுபெறுவதனால் இத்தொகுதி திறமைமிக்கஅதிபர் ஒருவரை இழப்பது எமக்கெல்லாம் கவலையளித்தாலும் கூட அவர் அடிமைத்தளையில் இருந்து தன்னை விடுவித்துசுதந்திர புருசனாக தமிழ் இனத்திற்கும், தமிழ் மண்ணிற்கும் தொண்டுசெய்ய முன்வந்திருப்பதையிட்டுப் பெருமையடைகிறேன்

"அதிபர் கடந்தகாலத்தில் மாணவர்உலகிற்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. அதைவிடப் பெரியசேவையை அவரிடம் இருந்து தமிழ்மண் இன்று எதிர்பார்க்கிறது. அவர் எந்தத்துறையில் சேவைசெய்தாலும் அந்தத்துறை புனிதம் நிறைந்ததாகவே இருக்கும்"

ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர் திரு. சடாட்சர சண்முகதாஸ் பேசுகையில் கூறியதாவது;

"அதிபர் நடராசாவிடம் கல்வி கற்றவர்கள் இன்று உயர்பதவியில் இருக்கிறார்கள். நானும் அவரிடம் கல்விகற்ற மாணவனே. அவர் எனக்கும் அவரிடம் கல்விகற்ற ஏனைய மாணவர்களுக்கும் அளித்த ஊக்கத்தினாலேயே நானும் இன்னும் தீவகத்திலுள்ள பலரும் உதவி அரசாங்க அதிபர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், பொறியியலாளர்களாகவும் கடமையாற்ற முடிகிறது. நான் ஒரு உதவி அரசாங்க அதிபர் என்று கூறுவதிலும் பார்க்க திரு. நடராசாவின் மாணவனென்று கூறுவதிலேயே பெருமையடைகிறேன்'

கரம்பொன் சண்முகநாத மகாவித்தியாலய அபிவிருத்திச்சபை செயலாளர் தி ந. எஸ். குகநாதன் பேசுகையில் "தமது கிராமத்திற்கு திரு. நடராசா செய்த சேவைகளுக்கு நன்றி தெரிவிக்க கரம்பொன் மக்கள் தவறினாலும் சுருவில் மக்கள் விழாஎடுப்பது பாராட்டுக்குரியது" என்றார்.

ஓய்வுபெறும் அதிபர் திரு. தி. நடராசா பதிலுரைநிகழ்த்துகையில்,

"ஒ நகிராமத்தில்உள்ள ஆசிரியர்களை தங்கள் கிராமத்தில் படிப்பிக்கவிடக்கூடாது. அவர்கள் தமது கிராமத்தில் கடமைகளைச் சரிவரச்செய்வதில்லை. நேரம்கழித்தே பாடசாலைக்கு வருவார்கள். அவர்களைத் தட்டிக்கேட்டால் கோவிப்பார்கள். ஆனபடியால் தமது கிராமத்தில் ஆசிரியர்கள் கல்விகற்பிக்க அனுமதிக்கக்கூடாது,

இன்று மாணவர்களுக்குப் படிப்பில் அக்கறையில்லை. மாணவர்கள் இன்று ஆசிரியர்களை மதிப்பதும்இல்லை. மாணவர்கள் பெரியபாடசாலைகளில் கல்விகற்பதையே விரும்புகிறார்கள்" என்றார்.

சட்டத்தரணி எஸ். கே. மகேந்திரன், சு. துரைச்சாமி உட்பட பலர் உரையாற்றினார்கள். இ. திருவருள் நன்றி கூறினார்.

(கொ-கு)

## "புதிய கல்விமுறை வெற்றிபெற பெற்றார் ஒத்துழைப்பு அவசியம்"

### -- தனிநாயகம் அடிகள்

(பண்டத்தரிப்பு)

"மூளைக்கு மட்டுமே வேலை கொடுக்கும் பழைய பாடத்திட்டம் மாணவர்களின் செயல் திறனை ஊக்குவிக்க மாட்டாது என்பதை உணர்ந்த அரசாங்கம் செய்தல், செயல் மூலம் உணர்தல் போன்ற புதிய முறைகளைப் புதிய பாடத் திட்டத்தில் புகுத்தியுள்ளது. இத்திட்டத்தினால், மாணவ சமுதாயம் தனது ஆற்றலையும், திறமைகளையும் வெளிப்படுத்த வழி ஏற்பட்டுள்ளது. இப்புதிய கல்வி முறை சித்தியடைய ஆசிரியர்களும் பெற்றோரும் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்."

இவ்வாறு பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தின் செயல்திட்ட கல்விக் கண்காட்சியையும் பொருட்காட்சியையும் திறந்து வைத்து உரையாற்றுகையில் தமிழறிஞர் தவத்திரு தனிநாயகம் அடிகளார் குறிப்பிட்டார். வித்தியாலய அதிபர் சங் சகோதரி மேரி கத்தரின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் தவத்திரு. தனிநாயகம் அடிகளார் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"எட்டுப் படிப்பை மாத்திரம் பெற்றிருந்த நான் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த பின்னர் தான், எனது கரங்களை உபயோகித்துப் பல பயனுள்ள கருமங்களைச் செய்யலாம் என்பதை உணர்ந்தேன். செய்தல், செய்கை மூலம் கற்றல் என்பன மாணவர்களின் இன்றைய கல்வி முறைக்கு மிகவும் பயனுள்ளதொன்றாகும். காலம் கடந்தாவது எமது அரசினர் இது பற்றிய திட்டத்தை எமது பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த முன்வந்தது வரவேற்கக் கூடியதொன்றாகும். முன்னர் மூளைக்கு மாத்திரமே வேலை கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது கண், காது, கைகள் போன்ற சகல அவயவங்களுக்கும் வேலை கொடுக்கப்படுகின்றது." —— (அ)

## டிப்ளோமா பரீட்சைக்குத் தோற்ற

## பட்டதாரி ஆசிரியர்களுக்கு கல்வி அமைச்சு அனுமதி!

(யாழ்ப்பாணம்)

ஐந்துவருடம் ஆசிரியர்களாகக் கடமையாற்றிய பட்டதாரி ஆசிரியர்கள் சகலரும் டிப்ளோமாப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்தகாலத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பளத்தைப் பெற்று ஐந்துவருடங்கள் பட்டதாரி ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்கள் மட்டுமே டிப்ளோமாப் பரீட்சைக்குத் தோற்றலாம் என இருந்த முடிவை எதிர்த்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம் மேற்கொண்ட முடிவையடுத்தே பட்டதாரிச் சம்பளம் பெறாத, ஆனால் பட்டப் பரீட்சை சித்தியடைந்தபின் ஐந்துவருடங்கள் சேவையாற்றிய ஆசிரியர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம். எனகல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலில் இத்திருத்தம் இடம்பெறும் என ஆசிரியர் கல்விக்குப் பொறுப்பான திரு பள்ளியக்காரா இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளருக்கு உறுதியளித்துள்ளார். இத்திட்டத்தினால் பட்டதாரிச் சம்பளம் பெறாதுள்ள பட்டதாரிகள் பலருக்கு இப் புதிய திட்டம் வாய்ப்பாக அமையும்.

இதனைப் பட்டதாரிச் சம்பளம் பெறாத பின்வரும் ஆசிரியர்கள் பயனடைவர். பட்டதாரிப் பயிற்சியாளர், பட்டதாரிச் சம்பளத்தை எதிர்பார்ப்போர், ஆசிரியர் பயிற்சி முன்ன பட்டதாரி ஆசிரியர்கள் தராதரப் பத்திரமற்ற

(7-ம் பக்கம் பார்க்க)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உடுவில் ஸ்ரீமீனாட்சிசுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நவக்கிரக ஆலயத்தில் நவக்கிரகமூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை நடைபெறும். கும்பாபிஷேக வைபவத்தை பயிலணி பிரம்மஸ்ரீ மு. வகடாட்சக் குருக்கள் நிறைவேற்றி வைப்பார்.

(கொ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தமிழர்கள்

# பண்டைப் பழமைபேசி காலத்தைப்போக்குகிறார்கள்

## வவனியா எம். பி. கவலை

(புளியங்குளம்)

"வவுனியா மாவட்ட பெற்றோர் பொருளாதார வளம் மிகக்குறைந்தவர் என்றும் ஆனால் கல்விக்காகவே இருந்து உழைக்கின்றார்கள் என்றும் வவுனியாத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு சா சிவசிதம்பரம் சனகராயன்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இல்லங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியின்போது சிறப்புரையாற்றும் போது குறிப்பிட்டார்.

திரு கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியதாவது: எனது தொகுதியில் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் கிராமப்புறங்களிலுள்ளன. அவற்றிற்குப் போதிய ஆசிரியர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. இவற்றை அரசினர் கூடிய விரைவில் போக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடந்த வருடம் எனது தொகுதிக்கு 18 ஆசிரிய நியமனங்கள் கிடைத்தன. ஆனால் டெடிகம தொகுதிக்கு 1200 நியமனங்கள் செய்யப்பட்டன.

எனது தொகுதியிலுள்ள மாணவர்களுக்கு ஆசிரியர்களோ கட்டிட வசதிகளோ இன்மையால் பின்தங்கியவர்களாகக் காணப்படுகின்றார்கள் ஆகையினால் இவர்களுக்கு அடிப்படை வசதிகளையாவது அரசு செய்துகொடுக்க வேண்டும்.

"உலகில் தமிழ் பேசும் மக்கள் 32 நாடுகளில் பரந்து வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் கையேந்தி அடிமைப்பட்டு வாழ்கின்றார்கள், தமிழர்களுக்கென ஒரு தனிநாடு கிடையாது. அவர்கள் சுதந்திரமாக தன்னைத்தானே ஆளக்கூடிய நிலையை அடையவில்லை. ஆனால் இன்றைய தமிழர்கள் பண்டைய தமிழனின் பழமையைப்பேசி காலத்தைப் பார்க்குகின்றார்கள்"

"எமது நியாயமான உணர்வுகளாலும் அகிம்சை வழியான போராட்டங்களினாலும், பேச்சுவார்த்தைகளினாலும், புரட்சிக்கவி பாரதி எம்மிடையே ஊட்டிய சுதந்திரதாக மூலமும் அறம்படைத்த வள்ளுவன் எமக்குக் காட்டிச் சென்ற பாதையின் வழிநின்று எமது கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டும்." (க)

தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு

# மக்கள் ஆணையைப்பெற்றவர் செய்யும் செயலா இது?

## தமிழ் காங்கிரஸ் செயலாளர் குமார் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"தமிழ் ஈழமே ஒரே இலட்சியம் என்ற முடிவுக்கு வந்த கூட்டணித் தலைவர்கள்; ஒற்றையாட்சியின் கீழ் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் நிறுவ விரும்பும் அரசாங்கத்துக்கு உதவுமுகமாக தமது பிரதிநிதியொருவரை நியமித்த செயல் தமிழ் ஈழத்தை நிறுவ மக்கள் கட்டளையைப் பெற்றவர்கள் செய்யக்கூடிய செயலா?"

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:



"1977ம் ஆண்டு தேர்தல் முடிந்ததும் கொழும்பில் ஒரு வரவேற்பில் கூட்டணியின் செயலாளர் நாயகம் "அடுத்த தேர்தல் தமிழீழத்தில் நடைபெறுமென்றும், அப்படியல்லவெனில் நாம் தேர்தலுக்குவர மாட்டோமென்றும், அப்படி நாங்கள் வந்தால் எம்மை அங்கொடைக்கு அனுப்புங்கள் என்றும் பகிரங்கமாகச் சொன்னார்" ஆனால் இன்று 1983ம் ஆண்டு சிறீலங்காவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கான மாவட்டங்களை நிர்ணயிக்கும் ஆணைக்குழுமுன் பாராளுமன்ற நாற்காலிகளை மனதில் வைத்துச் சாட்சியம் அளித்திருப்பது எதைக்காட்டுகின்றது. தமது இலட்சியத்தில் வாக்குறுதிகளில், உறுதி, பற்று நம்பிக்கை இருந்திருக்குமானால் ஒற்றையாட்சி முறையின் கீழ் தேர்தல் மாவட்டங்களை வரையறை செய்வதற்கான ஆணைக்குழுமுன் அகில இலங்கை ரீதியில் சிந்தித்துச் சாட்சியம் அளித்திருப்பார்களா?

"உண்மையாகவே தமிழ் ஈழத்தை நிறுவுவதற்கு கூட்டணித் தலைவர்களுக்கு நோக்கம் இருந்திருக்குமானால் ஒற்றையாட்சியின் கீழான மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றி ஆலோசனைகூடச் செய்திருக்கமாட்டார்கள். அதேபோல் தேர்தல் மாவட்ட வரையறை குழுமுன் சாட்சியமளித்திருக்கமாட்டார்கள்.

இலங்கைத் தேசிய பேரவை உறுப்பினராக இருக்கும் அதே நேரத்தில் தமிழ் ஈழத் தேசிய மன்றமாக அமைந்து தமிழ் ஈழத்திற்கு ஒரு அரசியல் அமைப்பை ஆக்க நடவடிக்கை எடுப்பதாக உலகம் அறியும்படி 1977ம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்த கூட்டணித் தலைவர்கள் ஈழத் தேசிய மன்றம் அமைக்கவும் அதற்கான தேர்தல்முறையை வகுப்பதற்கும் பதிலாக இலங்கை முழுவதும் தேர்தல் மாவட்டங்களை வரையறை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுமுன் சாட்சியம் அளித்ததன் மூலம் தாம் தமிழீழத் தேசிய மன்றம் அமைக்கவோ அதற்கென அரசியல் அமைப்பினை உருவாக்கவோ போவதில்லை எனத் தெட்டத் தெளிவாக உலக நாடுகளுக்குக்காட்டியுள்ளனர்" என்று தெரிவித்துள்ளார். (கு)

# கிளிநொச்சிக்கு மேலும் இரு பஸ்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவுக்கு இரண்டு மீளமைக்கப்பட்ட பஸ் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்பும் இதே டிப்போவிற்கு 5 புதிய பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே. (நெல் அ)

# "சிறந்த பிரஜைகள் உருவாகவேண்டும்"

(புலோலி)

"எதிர்காலத்தில் பூரண கல்வியறிவு நிரம்பிய சிறந்த பிரஜைகள் உருவாகி நாடு பொருளாதார அபிவிருத்தியில் மேம்பாடடைய வேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டே அரசாங்கம் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பெருந் தொகையான பணத்தைச் செலவு செய்து வருகின்றது. இதனை உணர்ந்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் ஒருங்கிணைந்து செயற்பட்டு நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்தி பொருளாதார சுபீட்சத்தையடைய வழி வகுக்க வேண்டும்"

இவ்வாறு, யாழ் விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. கே. பொன்னம்பலம், பருத்தித்துறை, புலோலி - வேலாயுதம் மகாவித்தியாலய ஒன்றிணைந்த கல்விப் பொருட்காட்சியை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து உரையாற்றிய போது குறிப்பிட்டார்

வித்தியாலய அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இப் பொருட்காட்சித் திறப்புவிழாவிலே தொடர்ந்து பேசிய யாழ். விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. பொன்னம்பலம் குறிப்பிட்டதாவது; மாணவர்கள் தமது அறிவையும், செயற்திறனையும் சுயமதிப்பீடு செய்வதற்கும், வெளிக்காட்டுவதற்கும் பொருட்காட்சிகள் முக்கியமாகின்றன. தமது திறமைகளையும் அறிவாற்றல்களையும் வெளிக்காட்டுமுகமாக உருவாக்கும் காட்சிப் பொருட்கள் பற்றிய விபரங்களை சக மாணவர்களுக்கும் ஏனையோருக்கும் விளக்கும் போது மாணவர்களிடத்தில் தன்னம்பிக்கையும், ஆளுமை வளர்ச்சியும் ஏற்பட முடிகிறது. பொருட்காட்சிகளுக்கான காட்சிப் பொருட்களை ஒழுங்கு செய்யும் போது, குழு முயற்சிக்கும் வாய்ப்பு ஏற்படுவதனால் மாணவர்களிடத்தில் ஒற்றுமை, சகோதரத்துவம் சகிப்புத்தன்மை, ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொள்ளும் தன்மை என்பன சிறப்படையும்.

# "கழிவு நீரை தெருக்களில் ஊற்றுதீர்"

(நெல்லியடி)

வீதிகளில் கழிவு நீரினை ஊற்றும் தேநீர்ச்சாலை உரிமையாளர்களை, நெல்லியடிப் பட்டின சுகாதாரப் பரிசோதகர் திரு. ஆர். ரொபேர்ட் எச்சரித்துள்ளார்.

வீதிகளில் கழிவு நீரினை ஊற்றுவோர் மீது நகர சுகாதார நலன் பேணும் சட்டத்தின் கீழ் வழக்குகள் தாக்கல் செய்யப்படுமென அவர் கண்டிப்பாக எச்சரிக்கை விடுத்துள்ளார். (அ)

சைவபரிபாலன சபை

# சமயபாடப் பரீட்சையில் பரிசுபெறுவோர்

(யாழ்ப்பாணம்)

1979-ம் ஆண்டு சைவபரிபாலனசபையாரால் நடாத்தப்பெற்ற சைவசமய பாடப் பரீட்சையில் அகிலஇலங்கைப் பரிசுபெறுவோர்கள் விபரம்;

10ம் வகுப்பு: செல்வி வசந்தி சுப்பிரமணியம் - (தங்கப்பதக்கம்) வட இந்துமகளிர்கல்லூரி, செல்வி சாந்தினி சாமிநாதன் - யாழ். இந்துமகளிர் கல்லூரி, செல்வி யாழினி இராமநாதன் - யாழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி

9ம் வகுப்பு: செல்வி சிவாஜினி சிவஞானசுந்தரம் - (தங்கப்பதக்கம்) யாழ் இந்துமகளிர் கல்லூரி, செல்வி சாந்தவதனி அருணாசலம் - வேம்படிமகளிர் கல்லூரி, செல்வி ஜனனி கணேசன் - மானிப்பாய் மகளிர் கல்லூரி.

8ம் வகுப்பு: செல்வன் சிவானுசாந்தன் அருவரதவிநாயகமூர்த்தி (தங்கப்பதக்கம்) - முத்துத்தம்பி ம வி., செல்வி இந்திரா பொன்னுத்துரை - வேம்படி மகளிர்கல்லூரி, செல்வி குமரா தனலிங்கம் - கரம்பொன் சிறிய புஷ்பமகளிர் ம. ம.வி

7ம் வகுப்பு: செல்வி ஜீவராணி இராசரெத்தினம் - புதுக்குடியிருப்பு ம. வித்தியாலயம், செல்வன் அருணகிரிநாதன் தங்கத்துரை (யாழ் இந்துக்கல்லூரி, செல்வி புஷ்பலதா சங்கரன் - மாத்தளை பாக்கிய வித்தியாலயம்.

6ம் வகுப்பு; செல்வன் கனகசபாபதி வரதராசப்பெருமாள் மானிப்பாய் இந்துக்கல்லூரி, செல்வன் அரவிந்தன் திருஞானசம்பந்தமூர்த்தி - சேர்வைத்திலிங்கம் துரைசுவாமிமத்திய மகாவித்தியாலயம், செல்வி விமலகுமாரி இராமலிங்கம் - வேம்படி மகளிர் கல்லூரி.

5ம் வகுப்பு; செல்வன் சுகுமாரன் கனகரெத்தினம் - வலந்தலை வடக்கு அ. மி. பாடசாலை, செல்வன் சதீஷ்குமார் ஏரம்பமூர்த்தி - யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, செல்வி துஷ்யந்தி மாணிக்கவாசகர் - யூனியன் கனிஷ்ட வித்தியாலயம்.

4ம் வகுப்பு: செல்வி ஷாமினி மாசிலாமணி - திருநெல்வேலி இ. த. க. பாடசாலை, செல்வன் மகேந்திரகுமார் சோமசுந்தரம் - அச்சுவேலி மகாவித்தியாலயம், செல்வி திருமகள் கார்த்திகேசு - தருமபுரம் இல. II த. வி,

3ம் வகுப்பு: செல்வி பிரகாயினி யோகேஸ்வரன் - கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலை, செல்வி சிவரூபி சிவசுப்பிரமணியம் - ஞானசாரி கல்லூரி கரவெட்டி, செல்வி சுமதி துரைச்செல்வம் - விக்டோரியாக்கல்லூரி.

2ம் வகுப்பு: செல்வி நந்தகுமாரி இராசையா - ஸ்ரீசண்முகானந்தவித்தியாசாலை, செல்வி பிரியதர்ஷினி பாலசுந்தரம் - இந்துமகளிர் பிரதமபாடசாலை செல்வன் மதிவண்ணன் சுப்பிரமணியம் - பெரியபுலம் மெ. மி. த. க பா

12ம் வகுப்பு; செல்வி சாரதாதேவி தில்லையம்பலம் - இராமநாதன் கல்லூரி, செல்வி ரதிவதனி சுப்பிரமணியம் : வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, செல்வி திருமாமணி கிருஷ்ணபிள்ளை - மெதடிஸ்த உயர்தர பெண் கல்லூரி பருத்தித்துறை

அதிக மாணவர்களைப் பரீட்சைக்கு அனுப்பியவகையில் பரிசுபெறும் பாடசாலைகள்: யாழ் வேம்படிமகளிர்கல்லூரி, யாழ் இந்துமகளிர்கல்லூரி, புத்தூர் சோமாஸ்கந்தக்கல்லூரி.

எதிர்வரும் வைகாசிமாதம் நடைபெறவிருக்கும் சைவமகாநாட்டில் சித்தி அடைந்தோருக்கு பரிசுகள், தராதரப்பத்திரங்கள் வழங்கப்படவிருக்கின்றன, (ஈ)

# முழங்காவில்இளைஞர்களுடன் மாவட்ட அமைச்சர்

(மாவிட்டபுரம்)

முழங்காவில் குழாய்க் கிணறு திட்டத்தில் தற்போது 20 பேருக்கு ஒரு கிணறு வீதமே உள்ளதாகவும், இனிமேல் 10 பேருக்கு ஒரு கிணறு வீதம் அமையத்தாம் ஆவனசெய்வதாகவும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் உறுதியளித்தார்.

முழங்காவில் குழாய்க் கிணறுத் திட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், முழங்காவில் குழாய்க் கிணறுத் திட்ட இளைஞர் விவசாயக்கழகம் அளித்த வரவேற்பில் பேசும் போதே இப்படி உறுதியளித்தார்.

முழங்காவில் அரசினர் பாடசாலை மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. சி சக்திதரன் தலைமையில் நடந்த இவ்வரவேற்புவைபவத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில், "படித்த இளைஞர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளதைக் காணும்போது தாம் மகிழ்ச்சியடைவதாகவும் இந்த இளைஞர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஆவனசெய்வதாகவும் கூறினார்.

ஒவ்வொன்றும் 10 பேரடங்கிய 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு காணிக்கும் அமைச்சர் விஜயம் செய்ததுடன் நீர் இறைக்கும் இயந்திரத்தை இயக்கி விவசாய முயற்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

அமைச்சருடன் மாகாணக் காணி அதிபர் திரு. சொ. கணேசநாதன், குடியேற்ற அதிகாரி, திரு. கோ. பரமேஸ்வரன், யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பி. பஞ்சலிங்கம், நீர்வள சபைப் பொறியியலாளர் திரு. குணசேகரம் ஆகியோரும் வந்திருந்தனர்.

இளைஞர் விவசாயக்கழகத்தால் மதியபோசனமும் அளிக்கப்பட்டது. (அ)

# நிதி அன்பளிப்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தான மகாகும்பாபிஷேகத்திற்கு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தினரும் நிதியுதவியுள்ளனர்.

இந்நிதியை பிரஸ்தாப மகாவித்தியாலய அதிபர் திரு. வீ. வ. நல்லதம்பி, பட்டத்தரசி திரு. எஸ். கே. மகேந்திரனிடம் கையளித்தார். (அ)

# முதலிரு இடங்களும் ஒரே பாடசாலைக்கு

(புலோலி)

யாழ். கல்வித் திணைக்களத்தால் பருத்தித்துறைக் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட "மனித போஷாக்கு" பற்றிய பேச்சுப் போட்டியில் முதல் இரு இடங்களையும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் பெற்றுக்கொண்டனர்.

செல்வி. என். ஷாமினி முதலாவது இடத்தையும் செல்வி கே. மணிமேகலை இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (கு)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

"அமரர் நல்லையா

# தமக்கென எதனையும் சேர்த்துவைக்காத தலைவர்"

## அஞ்சலிக் கூட்டத்தில் 'நவம்'

(யாழ்ப்பாணம்)

"30 லட்சம் தமிழ் மக்களின் தமிழ்த் தலைவராக அமரர் நல்லையா மதிக்கப்பட்டார். அரசியலிலும் சரி, பொதுவாழ்விலும் சரி தமக்காக எதுவும் சேர்த்துவைக்காத தலைவர் அவர்."

அமரர் நல்லையாவின் இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் நகர முதல்வர் திரு. இராசா விஸ்வநாதன் தலைமையில் நடந்த இறுதி அஞ்சலியில், திரு. வி. என். நவரத்தினம் மேலும் கூறியதாவது:- "அமரர் நல்லையா, பல்வேறு துறைகளில், தமிழினத்திற்காகப் பாடுபட்டார். இதற்காக சிறையும் சென்றிருக்கிறார். அவர் தனியாக சிறுபான்மைத் தமிழர்களின் விடுதலைக்காகமட்டும் பாடுபடவில்லை. முழுத் தமிழினத்தின் விடுதலைக்காகவும் பாடுபட்டார். அவரின் இழப்பு, 30 லட்சம் தமிழ் மக்களின் இழப்பாகும் தமிழ் மக்களின் தமிழ்த் தலைவர் ஒருவரை நாம் இழந்துள்ளோம்.

சிறுபான்மைத் தமிழர் விடுதலை முன்னணி பொதுச் செயலாளரான திரு. எம். எஸ். அலெக்சாண்டர் பேசுகையில் கூறியதாவது:- எமது விடுதலை முன்னணி வளர்ந்து வரும் இவ்வேளையில், எமது விடுதலை முன்னணித் தலைவரான அமரர் நல்லையாவின் மறைவு பேரிழப்பாகும் அவர் சிறுபான்மைத் தமிழ் மக்களின் சமூக, கல்வி, பொருளாதார விடுதலைக்காக அரும் பாடுபட்டார். தீண்டாமை ஒழிப்புக்காக பல கஷ்டங்களையும் இன்னல்களையும் அனுபவித்தார். தனது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்தார்.

திருவாளர்கள் எம். சி. சுப்பிரமணியம், ஏ. துரைராசசிங்கம் க. நடராசா, க சீனித்தம்பி மற்றும் பலர் உரையாற்றினார்கள். (க

### சாரண பயிற்சி முகாம்

[புளியங்குளம்]

வவனியா மாவட்ட ஆசிரியர்களுக்கான சாரண பயிற்சி முகாம்களை சாரண உதவி ஆணையாளர் திரு. சி. எஸ் சுப்பிரமணியம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடாத்தினார்.

இதனையடுத்து வவனியா மகாவித்தியாலய சாரண மாணவர்களுக்கு சாரணர் சின்னம் சூட்டும் வைபவமும் நடைபெற்றது. [+[

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை சன சமூகசேவா சங்கத்தின் 37வது ஆண்டுப்பொதுக்கூட்டம் இம்மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பொதுக் கூட்டம் திரு. வ ஆ. அதிருபசிங்கம் தலைமையில் நடைபெறும்.

## சங்கானை கூ. ச. கிளையில் ஓடுபிரித்துத் திருட்டு

(சங்கானை)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் துணவி கிளையின் ஓட்டைப் பிரித்து உட்புகுந்த திருடர்கள் சுமார் நாலாயிரத்து முன்னூறு பெறுமதி வாய்ந்த புடைவைகளை களவாடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

சங்கானைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். புடைவை வைக்கப்பட்டிருந்த பெட்டியின் இரு பூட்டுக்களையும் உடைந்த நிலையில் பொலிசார் கண்டெடுத்தனர். (க)

### 40 வீடுகள் பூர்த்தி

(மட்டக்களப்பு)

கல்முனைத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு பாட அமைச்சருமான ஜனாப் ஏ. ஆர் எம் மன்சூரினால் மருதமுனை என்னுமிடத்தில் அமைக்கப்பட்டு வரும் 180 வீடுகள் கொண்ட வீடமைப்புத்திட்டத்தின் முதற்கட்ட வேலையில் 40 வீடுகள் முடிந்துள்ளன. இவ்வீடுகள் ஏப்ரல் மாதம் நடுப்பகுதியில் ஜனாப் மன்சூரினால் வீடற்ற முஸ்லிம்களுக்கு வழங்கப்படும். இவ்வீடுகள் மலசலகூடம், குடிநீர், மின்சாரம் உட்பட சகல வசதிகளையும் கொண்டுள்ளன. (ச)

### கல்வித்திணைக்கள பாராட்டுப் பெறுவர்

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த பத்து மாணவ மாணவியர்களுக்குக் கல்வித்திணைக்களப் பாராட்டு அளிக்கவுள்ளது.

இக்கல்வி வட்டாரத்தில் கல்வி, வெளிக்கள ஆய்வு வேலைகளில் சிறந்த முறையில் இயங்கித் தேர்ச்சி பெற்றுள்ள ஐந்து மாணவர்களும், ஐந்து மாணவிகளுமே இப்பாராட்டைடபெறவுள்ளனர்.

இப்பாராட்டு வைபவம் உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

### 'சகல மாணவரும் பங்குபற்ற வேண்டும்'

(புளியங்குளம்)

பாடசாலையில் கல்விகற்கும் சகல மாணவர்களும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றித் தம்மிடையே மறைந்து கிடக்கும் ஆற்றலை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். என்று உடற்பயிற்சி கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். பி. நாராம்பனுவ் சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (க)

### நூலறிமுகமும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத் தலைவர் கலாநிதி அ சண்முகதாஸ் தலைமையில் கழகத்தின் நூலறிமுகவிழாவும் பொருளியல் கருத்தரங்கும் நடைபெற்றது

திரு. சின்னையா சிவநேசனின் 'இருநாடகங்கள்' என்ற நாடக நூலை திரு. சி. மௌனகுரு வெளியிட்டு வைத்தார்.

திருமதி கலையரசி சின்னையா கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

திரு. க. சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார் நூலாசிரியர் சின்னையா சிவநேசன் பதிலுரை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொருளியல் கருத்துரை 'இலங்கையின் இன்றைய பொருளாதார நிலை' என்ற தலைப்பில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக் கழக குளியற்றுறை விரிவுரையாளர் திரு அந்தோனிமுத்து இக்கருத்துரையை வழங்கினார். இதனைத் தொடர்ந்து சபையோர் உரையாடலும் இடம்பெற்றது

முத்தமிழ்க் கழகத்தின் பிரசாரத்துறைச் செயலாளர் திரு பி நடராசா நன்றி கூறினார் (நா)


# டியுறேல்

## அப்பிள் பழச்சுவையுள்ள, இரும்புச்சத்து நிறைந்த, பிள்ளைகளுக்கான விற்றமின் பாணி.







பூச்சிக் கோளாறு, உங்கள் பிள்ளைகளுக்குப் பெரும் சோகையை உண்டாக்கி கடும் பலவீனத்தை ஏற்படுத்தி சக்தியை இழக்கச் செய்கிறது.

இரும்புச் சத்தும், பி கொம்பிளெக்சும் கொண்ட பிள்ளைகளுக்கான டியுறேல், இரத்த விருத்தியை அதிகரிக்கச் செய்து, போஷாக்குக் குறைவு, பலவீனம் ஆகியவற்றை எதிர்க்கிறது.

பிள்ளைகளுக்கான டியுறேல் பாணி மதுசாரமற்றது. அத்துடன் உங்கள் பிள்ளைகள் பெரிதும் விரும்பும் அப்பிள் பழச் சுவையுடையது.

உங்களது பிள்ளை களைப்புற்று, சோர்வடைந்திருக்கும் போது மீண்டும் மெருகூட்டி சுறுசுறுப்பாக்க சக்திச் செறிவும், விற்றமின்களும் கொண்ட பிள்ளைகளுக்கேயுரிய டியுறேல் கொடுங்கள். அதுவே பலவீனத்தைப் பறக்கச் செய்கிறது.... அதுவே பலம் வழங்குகிறது.

ஒவ்வொரு கரண்டி பிள்ளைகளுக்கான டியுறேலிலும் இரும்புச்சத்து நிரம்பியிருக்கிறது.

[illegible] 170 மிலீ. - ரூ. 13/75

Grant K & E 3254


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈரானிய ஷா பனாமாவிலிருந்து எகிப்து வந்து சேர்ந்தார்!

## பணயநாடகம் தொடரும்?

பனாமா, மார்ச். 24

ஈரானிய முன்னாள் மன்னர் ஷா பனாமாவிலிருந்து வெளியேறி எகிப்து போய்ச் சேர்ந்தார்.

கடந்த நான்கு மாதங்களாக பனாமாவில் வசித்து வந்த ஷா எகிப்திய அதிபர் ஜனாதிபதி அன்வர் சதாத்தின் அழைப்பின் பேரிலேயே அங்கு சென்றுள்ளார்.

ஷாவின் ஆட்சிக் காலத்தின் போது அவர் இழைத்ததாக கூறப்படும் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு அவரைத் திருப்பி யனுப்புமாறு ஈரான் பனாமாவை கோரியிருந்ததுடன் காலக்கேடுவும் விதித்திருந்தது.

ஈரான் விதித்திருந்த காலக்கேடு முடிவடைவதற்கு சில மணி நேரத்திற்கு முன்னரே ஷா பனாமாவை விட்டு வெளியேறினார்

இதே வேளையில் ஈரான் தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பத்திரமும் இன்று பனாமாவிடம் கையளிக்கப்படவிருந்தது.

ஷா ஜுமை வைவிட்டு வெளியேறியது தொடர்பாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஜூப் கொட் ஸாதே கருத்து தெரிவிக்கையில் "அமெரிக்க பணயக் கைதிகளின் நிலை இந்த நடவடிக்கையால் மேலும் மோசமடையும்" என்று கூறினார். (கு)

## "இனிய நினைவுகளுடனேயே வெளியேறினேன்'

கெய்ரோ, மார்ச். 24 பனாமாவிலிருந்து இன்று காலை இங்கு வந்து சேர்ந்த ஈரானிய ஷா மிகக்குதூகலமாகவே காணப்பட்டார்

கடந்த நான்கு மாத கால பனாமா வாழ்க்கை பற்றி குறிப்பிட்ட ஷா தாம் அங்கு மிகவும் சந்தோஷமாகவே வாழ்ந்ததாகக் கூறினார். பனாமா குடியரசிற்கும், மக்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்த அவர் தாமும் தமது மனைவியும் இனிய நினைவுகளுடனேயே பனாமாவை விட்டு வெளியேறியதாகக் கூறினார். (கு)

## சம்பளம் நிறுத்தப்படும்

(மட்டக்களப்பு)

வைத்திய பரிசோதனை முடிக்காத ஆசிரியர்களுக்கு அடுத்த மாதத்திற்குள் வைத்திய பரிசோதனை அறிக்கைகளைச்சமர்ப்பிக்காவிடின் சம்பளம் நிறுத்தி வைக்கப்படும் என்ற உத்தரவு மட்டக்களப்பு பகுதியில்கடந்த காலங்களில் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கு கல்விஇலாகாவினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (கு)

## வை.எம்.சி.ஏ. புனரமைக்கும்

(மட்டக்களப்பு)

கிறிஸ்தவ இளைஞர் சங்கத்தினரால் மட்டக்களப்புமாவட்டத்தில் நரிப்புலித்தோட்டம் என்னும் கிராமம் விஸ்தரிக்கப்பட்டுவருகின்றது.

இக்கிராமத்தில் மிகவும்பின் தங்கிய வறியகுடும்பங்களுக்கு ஐம்பதுவீடுகள் கட்டப்பட்டு வருகின்றது. இவ்வீடுகளில் 75 சதவீதமான வீடுகள் கட்டப்பட்டுள்ளது. ஏற்கவவே 70 வீடுகள் கட்டத் திட்டமிட்ட போதிலும் நிதிப்பற்றுக்குறை காரணமாக 50 வீடுகள் கட்டி இன்னும் இருமாத காலத்தில் முடிவுபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு)

## கமநலச்சேவை நிலையங்கள்

# உப உணவுத்தானியங்கள் கொள்வனவு செய்யும்

(நெல்லியடி)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கமநலச் சேவை நிலையங்கள், விவசாயிகளிடமிருந்து உபஉணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இறுங்கு, சோளம், எள்ளு, நிலக்கடலை, செத்தல்மிளகாய், பஞ்சள், உளுந்து, சோயா அவரை போன்ற உபஉணவுப் பொருட்களை இந்நிலையங்கள் கொள்வனவுசெய்யும்.

விவசாயிகளிடமிருந்து பெற்ற உபஉணவுப் பொருட்களுக்கான பணம் காசோலையாக வழங்கப்படவுள்ளது. இக்கொள்வனவு புதன்கிழமை தோறும் நடைபெறவுள்ளது. (அ)

# அமெரிக்க விமானந்தாங்கி கப்பல் ஜப்பான் வந்தது

டோக்கியோ, மார்ச். 24 அமெரிக்காவின் விமானந்தாங்கிக் கப்பலான 'மிட்வே' யும் அதன் காவற் கப்பலும் அமெரிக்காவின் 7வது கடற்படையின் போக்குவரத்துக் கப்பலும் ஜப்பானியத் துறைமுகமான ஸாஸிபோவுக்குள் வந்துள்ளன. இத் துறைமுகத்தில் தான் அமெரிக்கக் கடற்படை தனது பிரமாண்டமான வெடிமருந்துச் சாலையைக் கொண்டிருக்கிறது.

அமெரிக்கா வியட்நாமில் தலையிட்டது முதல் 'மிட்வே' ஸாஸிபோ துறைமுகத்தில் நடமாடி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## ராணுவவீரருக்கு சிறைத்தண்டனை

மணிலா, மார்ச். 24

போதைப்பொருள் சம்பந்தமான நாட்டின் சட்டத்தை மீறியதற்காக நான்கு அமெரிக்க ராணுவ வீரர்களுக்கு, பிலிப்பைன்ஸ் நீதிமன்றம் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது.

இந்த நான்கு அமெரிக்க ராணுவ வீரர்களும் பிலிப்பைன்ஸில் உள்ள கிளாக்பீல்ட் விமான தளத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமது சிறைத்தண்டனையை அனுபவித்தபின்னர் நாட்டை விட்டு வெளியேற்றப்படுவர். (கு)

# "ஆப்கான் கிளர்ச்சியாளர் உண்மைமுஸ்லிம்கள் அல்ல"

## கர்மல் அரசாங்கம் கண்டனம்

காபூல், மார்ச். 24 ஆப்கானிஸ்தானில்கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள முஸ்லிம்கள் உண்மையான முஸ்லிம்கள் அல்ல என்று ஆப்கானிஸ்தான் அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

கிராமப்புறங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள தீவிரவாத முஸ்லிம் இயக்கங்களை முறியடிப்பதிலேயேஆப்கானிஸ்தான் அரசு தற்போது தீவிர கவனம் செலுத்திவருகிறது.

சோவியத்யூனியனின் ஆதரவுடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஜனாப் கர்மலின் அரசாங்கம், ஆப்கானிஸ்தானில் வெளிநாடுகளின் ஆக்கிரமிப்புகள் முடிந்ததும் அங்கிருக்கும் சோவியத் துருப்புகள் வெளியேறிவிடும் என்று தெரிவித்துள்ளது.

உலக நாடுகளின் கணிப்பின்படி தற்போது ஆப்கானிஸ்தானில் 85 ஆயிரம் சோவியத் துருப்புகள் இருப்பதாகக் கணிக்கப்பட்டுள்ளது. (கு)

# கிருமிநாசினி தெளித்தவர் மிகுதியைத்தானும் குடித்தார்

(பண்டத்தரிப்பு)

"தோட்டத்திலுள்ள மிளகாய்ச் செடிகள் நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கு கிருமிநாசினி தெளிக்க வேண்டும். தெளிகருவியை இரவல் வாங்கிக் கொண்டு போய் கிருமிநாசினியை அடித்துவிடு' என்று தமது 21 வயது மகனிடம் கூறினாராம் தந்தை ஒருவர். மகனோ கிருமிநாசினியை ஒரு தடவை மிளகாய்ச் செடிகளுக்கு தெளிகருவி மூலம் தெளித்துவிட்டு மிகுதியைத் தான் குடித்து உயிரை மாய்த்துக் கொண்டாராம். இச் சம்பவம் சண்டிலிப்பாயில் நடைபெற்றது. சண்டிலிப்பாய் மடத்தடியைச் சேர்ந்த மாணிக்கம் கமலதாசன் என்ற 21 வயது இளைஞரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இவரது மரண விசாரணை யாழ். அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரண விசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது. சாட்சிகளைச் சங்கானைப் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் எஸ். குமாரசிங்கா ஆஜர் செய்தார்.

காலஞ் சென்றவரின் தந்தை கந்தன் மாணிக்கம் சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:- "இறந்த எனது மகன் வீட்டு வேலைகளைக் கவனியாது தன் நண்பர்களுடன் சேர்ந்து வீண் அரட்டைகளில் ஈடுபட்டு வந்தார். சம்பவதினம் நான் அவரைக் கூப்பிட்டு கெட்ட சினேகிதர்களுடன் கூடி எதிர்காலத்தை வீணாக்காமல், தோட்ட வேலைகளைக் கவனிக்க வேண்டும் என்றும், தோட்டத்து மிளகாய்ச் செடிகள் மருந்து அடிக்காததினால் பழுத்துப் போவதாகவும் தெளிகருவியை இரவல் எடுத்து அந்த மிளகாய்ச் செடிகளுக்குக் கிருமிநாசினியை அடிக்குமாறும் கூறினேன். அவர் தெளிகருவி மூலம் மிளகாய்க் கன்றுகளுக்கு ஒரு தடவை கிருமிநாசினியை அடித்துவிட்டு மிகுதியைக் குடித்து மயங்கிக் கிடப்பதாக அறிந்து அங்கு ஓடிச் சென்றேன். மயக்க நிலையில் கிடந்த அவரை கார் மூலம் யாழ். அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன். வழியில் அவர் இறந்துவிட்டார்."

பக்கத்துக் காணிக்காரரான நாகமுத்து ரங்கநாதன் என்பவரும் சாட்சியமளித்தார். விசாரணை முடிவில் தற்கொலை என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். (அ)

## "என்னாலான உதவிகளைச் செய்வேன்"

[யாழ்ப்பாணம்]

"செட்டிபுலம் கிராமம் சகல துறைகளிலும் பின்தங்கியுள்ளது. இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்காக என்னால் ஆன உதவிகளைச் செய்வேன்".

செட்டிபுலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் பீடித்தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்துப் பேசிய வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

சனசமூக நிலைய மேற்பார்வையாளர் திரு. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. குணநாயகம் தொடர்ந்து பேசுகையில் "இன்று ஆரம்பிக்கப்படும் பீடித் தொழிற்சாலையில் பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கவுள்ளன. இது போன்று பலதொழிற்சாலைகள் இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் மூலம் மக்கள் பயன்பட முடியும்". என்றார். ஊர்காவற்றுறை வைத்தியகலாநிதிதிரு. சிவராசா உட்படப்பலர்பேசினர். (கொ-கு)


# விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mal Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-விஜயா-சந்திரமோஹன் கவிதா நடித்த
**ஜெனரல் சக்கரவர்த்தி**
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சஞ்சீர் (ஹிந்தி) SANJEER

லிடோ (யாழ்.நகர்) Daily: 10-30, 3-30, 6-30 & 9-40 போன்: 7698
**Arabian Adventure**
(Color)

ராணி (யாழ்நகர்) குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும் தினசரி 4 காட்சிகள்
இல்லறம் இன்பமாக விளங்க "இருவர் உள்ளம்"
இணையவேண்டிய அவசியத்தை விளக்கும்
இணையற்ற குடும்பச் சித்திரம்
சிவாஜி கணேசன்-சரோஜாதேவி-எம்.ஆர். ராதா
பாலாஜி-ரங்கராவ் இன்னும் பலர் நடித்த
**இருவர் உள்ளம்**
(புதிய பிரதி)
திரைக்கதை வசனம்: கலைஞர் கருணாநிதி

மனோஹரா யாழ்ப்பாணம் A
தினசரி 10-30 a.m., 2-30, 6-30 & 9-45 p.m.
எம். ஜி. ஆர்- கே. ஆர். விஜயா
**நல்லநேரம்** (புதிய பிரதி)

2nd Crowded week
**SRIDHAR** JAFFNA
Daily 5 Shows at 10-30 a.m. 2-30, 4-45, 7-00 & 9-30 p.m.
**THAT MAN BOLT**
Entertainment in Karate, Judo and Kick-Boxing
தற் மான் போல்ற்
பயங்கர காராட்டி ஜுடோ நிறைந்த
ஆங்கில சண்டைப்படம்

2nd Crowded week
**REGAL** JAFFNA. Phone 360
Daily at 10-30 a. m. 2-00, 4-30, 7-00 & 9-30 p.m
ROGER MOORE as JAMES BOND
**LIVE AND LET DIE**
(More suited for Adults)


## றோயல் வெற்றி

(அரியாலை)

கொழும் றோயல் கல்லூரிக்கும், யாழ். பரியோவான் கல்லூரிக்கும் இடையே பரி. யோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் றோயல் கல்லூரி 25ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றோயல் கல்லூரி 43ஓவர்களில் 6விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் எஸ். பால்கோல் 81 ஓட்டங்களையும், ஏ. தேவசுந்தரம் 41 ஓட்டங்களையும், ஆர். யுரங்பதி 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பி. ஜெயகுமார் 25ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுகளையும், ஈ. யே. ஜெபரத்தினம் 43ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கெட்டுகளையும், எஸ். கருணகுமார் 36ஓட்டங்களையும் 2விக்கட்டுக்களையும் கைப்பற்றினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரி 43 ஓவரில் 7விக்கெட்டுக்களை இழந்து 192ஓட்டங்களைப்பெற்றது. உதவிக் காப்டன் என். வசந்தன் 99ஓட்டங்களையும் எஸ். கருணகுமார் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

உதவி காப்டன் வை. பீரிஸ் 45ஓட்டங்களைக் கொடுத்து 2விக்கட்டுக்களையும், எச். முசாபர் 29ஓட்டங்களைக் கொடுத்த 5விக்கட்டுகளையும் கைப்பற்றினர். (இ)

## பட்டதாரி...

(3ம்பக்கத் தொடர்ச்சி)

பட்டதாரி ஆசிரியர்கள்.

இது இவ்வாறிருக்க 1976ம் ஆண்டு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியக்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கு சிறப்புத்தேர்ச்சிக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை எனப்பல ஆசிரியர்கள் முறையிட்டுள்ளதாகவும் இவ்விடயமாக விரைவில் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார். (கொ)


வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—கே.ஆர்.விஜயா
**கிருகப் பிரவேசம்**

...ரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
நாகேஷ் (இருவேடம்)
ஸ்ரீகாந்த்-பிரமிளா
**கைநிறைய காசு**
(புதிய பிரதி)


# மாடுதிருடியதாக மூவர் கைதாகி றிமாண்டில்

(புலோலி)

கிளிநொச்சியிலிருந்து இருவண்டி மாடுகளைத் திருடி விற்பனை செய்யும் நோக்கத்துடன் பருத்தித்துறைக்குக் கொண்டுவந்த மூன்று நபர்களும் வராத்துப்பளைச் சந்தியில்வைத்து பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்டனர்.

இந்நபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதில் நீதவான் திரு. ஜி வி சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபர்கள் மூவரையும் அடுத்த மாதம் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த தியாகராசா நடராசா, கணபதிப்பிள்ளை வல்லிபுரம், நாகர்கோவில் தரவையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் திருஞானம் ஆகிய மூன்று சந்தேக நபர்களுமே பருத்தித்துறைப் பொலிசாரால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர் சந்தேக நபர்கள் மூவரையும் அடுத்த மாதம் 1ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், அத்தினம் சந்தேக நபர்களைக் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் உத்தரவிட்டார். மாடுகள் இரண்டும் பருத்தித்துறைப் பொலிசாரின் பாதுகாப்பில் உள்ளன. (கு)

# "விளையாட்டுப் போட்டிகள் மூலம் தேசிய ஒருமைப்பாடு"

[யாழ்ப்பாணம்] — 'இருசமூகத்தவர்கள் மத்தியில் கடந்த காலங்களில் இருந்துவந்த கசப்புணர்வை விளையாட்டுப் போட்டிகள் மூலமாக நீக்கி, தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கவேண்டுமென்று கருதி, யாழ். மாவட்ட அமைச்சு தென்னிலங்கையிலுள்ள பிரபல பாடசாலைகளின் கிரிக்கெட் அணியினரை வடபகுதிக்கு அழைத்து, யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல பாடசாலை கிரிக்கெட் அணிகளுடன் அவர்களை விளையாட ஒழுங்கு செய்திருந்தது.,'

இவ்வாறு றோயல் கல்லூரி கிரிக்கெட் குழுவினருக்கும் ஆசிரியர்களுக்கும் யாழ் செயலக வரவேற்பு மண்டபத்தில் யாழ் மாவட்ட அமைச்சு அளித்த தேநீர் விருந்தில்யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி வரவேற்றுப் பேச்சையில் குறிப்பிட்டார்.

தேநீர் வைபவத்திற்கு முன்னர் 1928, 1929-ம் ஆண்டுகளில் கொழும்பு றோயல் கல்லூரியின் 'காப்டனா'க இருந்த நல்லூரைச் சேர்ந்த என். சந்தையா அண்மையில் காலமானதற்கு இரண்டுநிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது. (கெ)

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 12-ந்திகதி
(25-3-80)
செவ்வாய்க்கிழமை

மேடம்: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எடுத்த முயற்சியில் முன்னேற்றமுண்டு. இருப்பிடமாற்றமும் ஏற்படலாம்.

இடபம்: அறவழியின்மூலம் மக்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பூமிச்சிறப்புமுண்டாம். கலகலப்பான தினம் சகோதரசுகமும் உண்டு.

மிதுனம்: தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும் பிறர் நம்பிக்கையைத் தவிர்க்கவும். வாழ்க்கையிலும் கடன்படநேரிடலாம்.

கடகம்: வாழ்க்கை புகிர் நிறைந்ததாகவேகாணப் டும். நல்லதைச் செய்யினும் வீண் பழி கேட்க நேரிடும். திடசித்தமே நன்று.

சிங்கம்: மேடைப்பேச்சாளர்கள் பெரும் புகழுடைவர் ... உதவுவதில் முன்னிற்பீர்கள். குடும்ப வாழ்க்கையிலும் சிலர் ஈடுபடுவர்.

கன்னி: குறைகேட்க நேரிடும். கடமையில் தடைதோன்றும் ...ஷ்டத்திற்கு இடமாற்றத்திற்கு ...டமுண்டு. பிணிக்கிடங்கொடாது நடக்கவும்.

துலாம்: தாய்வழிப் பெருமை ...டமுண்டு. கல்வித்துறையில் உற்சாகம் பிறக்கும். அறிஞர்கள் ஆதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்: தெளிந்த மனம். தெய்வசிந்தை தேடியது கிடைக்கும் அமைதியுடன் ஆனந்த வாழ்வுமுண்டு.

தனுசு: துன்டத்தின் நிழலாட்டம் தொடரும். இன்று அதிகப் பேச்சைத் தவிர்க்கவும். வரவிலும் தடைகள் தோன்றும்.

மகரம்: உள்ளத்தில் உவகைக் கூத்து. உறவினர் கொண்டாட்டமும் உண்டு. தித்திக்கும் செய்தியும் கிடைக்கும். சுபதினம்.

கும்பம்: மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காகுவீர்கள். வரவிலும் தடைகள் தோன்றும். பிரயாணத்தைத் தவிர்க்கவும்.

மீனம்: தந்தையின் உதவி கிடைக்கும் புதியஸ்தானம் கிடைக்கலாம். புண்ணிய விருப்பும் மேலிடும். அதிர்ஷ்டகரமான தினம்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

## ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு சதீஸ்வரன் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன 'ஏ' பிரிவு வெற்றியீட்டி 'சதீஸ்வரன்' வெற்றிக்கேடயத்தை தனதாக்கிக்கொண்டது.

இயக்கச்சி கென்னடி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன 'ஏ' பிரிவு மோதியது

இந்த ஆண்டு ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனம், கிளிநொச்சிப் பிரிவில் நடாத்தப்பட்ட கரபந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் 5 வெற்றிக்கேடயங்களை சுவீகரித்து சாதனையைநிலைநாட்டியுள்ளது. (கெ)


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 9-45
சனி, ஞாயிறு 2-45
A.V.M. ராஜன்
**தெய்வம்**
(கலர்-புதிய பிரதி)

பல வெற்றிப்படங்களை திரையிட்டு ரசிகர்களை மகிழ்வித்த
வின்ஸர் ஸ்தாபனத்தாரின் மகத்தான ஈஸ்ரர்-புத்தாண்டு வெளியீடு!
கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் வெற்றிநடை போடுகின்றது
தினசரி 10-00, 1-30, 4-30, 7-15, 10-00
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
"கிழக்கே போகும் ரயில்" புகழ்
★ சுதாகர் ★ ராதிகா ★ விஜயன்
★ ரதி ★ பாக்கியராஜ் ★ கலா
மற்றும் பலர் நடித்த
காதல், இசை, நிறைந்த நிந்தமிழ் திரையோவியம்
**நிறம் மாறாத பூக்கள்**
(வண்ணப்படம்)
திரைக்கதை டைரக்ஷன்: வெள்ளிவிழா இயக்குநர் பாரதிராஜா
இசையமைப்பு: இளையராஜா

சாந்தி (யாழ்நகர்) போன்: 7642 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி மஞ்சுளா
**உத்தமன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் பெற்றெடுத்த பார்புகழ் இசைக்கலைஞன்

## நாளை யாழ்நகரில் ரவிசங்கர் இசை நிகழ்ச்சி



ரவி சங்கர் ஒரு நகரத்துக்குவருகிறர் என்றல் இசை யார்வமுள்ளவர்கள் மத்தியில் அச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தும். இன்று, நியுயோர்க், டோக்கியோ, லண்டன், பாரிஸ் போன்ற நகரங்களில் ரவிசங்கருடைய இசைநிகழ்ச்சிக்கு நூறு டொலர் கொடுத்தும் அனுமதிபெறமுடியாத நிலை அடிக்கடி ஏற்படுகின்றது என்றல் அது மிகையாகாது. அந்தளவுக்கு, கீழைத் தேசத்தையும் மேலைத்தேசத்தையும் ஒருங்கே கவர்ந்த சித்தார்வாத்தியக் கலைஞராக ரவிசங்கர் உலகப் புகழ் பெற்றுள்ளார். அவருடைய இசையில் மயங்கிய பல அமெரிக்கர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ரவி என்ற பெயரைக்கூட இட்டுள்ளனர். அப்படியான ஒரு கலைஞர் யாழ்ப்பாணத்துக்கு வருவது உண்மையில் ஓர் அரிய சம்பவமே.

இருபதாம் நூற்றண்டின் நடுப்பகுதியில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதத்தின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட பாரதநாடு, அடுத்துவந்த தசாப்தங்களில் தனது பண்டைய பண்பாட்டை மீண்டும் வளர்க்கத் தொடங்கியதுடன், அப் பண்பாட்டை உலகுக்கு அறிவிப்பதற்குத் தனது தலைசிறந்த பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவும் தொடங்கியது. அப்படியாகச் சென்று பாரதத்துக்கு புகழ்தேடிக் கொடுத்த கலைஞர்கள் வரிசையில் எம். எஸ். சுப்புலக்ஷ்மி, பாலசரஸ்வதி, ராம்கோபால், உதயசங்கர் போன்ற பலர் இடம்பெறுகின்றனர். அந்த நீண்ட வரிசையில் இருவராகப் பண்டித ரவிசங்கரும் உஸ்ராத் அல்லரக்காவும் முறையே சித்தார் வாத்திய வல்லுநராகவும் தபேலா வாத்திய வல்லுநராகவும் இடம்பெறுகின்றனர். யாழ் நகருக்கு ரவிசங்கருடன் கூடவே உஸ்ராத் அல்லரக்காவும் வருகின்றர்.

### மரபு வழிவந்த கலைஞர்

நீண்டகால வரலாற்றையுடைய இந்திய இசைக்கலை மரபில் வந்த ஒரு கலைஞரே ரவிசங்கர். இந்திய சாஸ்திரீய இசைமரபானது பதின்மூன்றும் நூற்றண்டின் பின்னர் வடக்கில் ஹிந்துஸ்தானி சங்கீதமாகவும் தெற்கில் கர்நாடக இசையாகவும் பிளவுபட்டு வேறு வேறு வழியே வளர்ந்து சென்றமை பலரும் அறிந்த விஷயமே. ஹிந்துஸ்தானி சங்கீதத்தின் வரலாற்றில் அக்பர் பேரரசனின் காலமாகிய பதினறும் நூற்றண்டு ஒரு சிறந்த காலமாக அமைந்தது. அக்காலத்தில் தன்சென் என்னும் இசைமேதை அந்த இசைமரபை வளர்ப்பதற்குப் பெரும் தொண்டாற்றினர். அவருடைய மரபில் வந்த வஸீர் கான் என்ற வல்லுநரைக் குருவாகக் கொண்ட தலைசிறந்த ஒரு கலைஞராகிய உஸ்ராத் அல்லாவுத்தீன் கான் என்பவரே ரவிசங்கருடைய மதிப்புவாய்ந்த குருவாக விளங்கினர்.

**பேராசிரியர் கா. இந்திரபாலா**

ஒரு வங்காளக் குடும்பத்தைச் சேர்ந்த ரவிசங்கர் காசியிலே 1920 ஏப்பிரல் 7இல் பிறந்து, ஓரளவு செல்வமுள்ள சூழ்நிலையில் வளர்ந்தார். இவருடைய தமையனகிய உதய சங்கர் பின்னர் சிறந்த இந்திய நடனக் கலைஞராகப் பாரதத்துக்குப் புகழ் தேடிக்கொடுத்த ஒருவராவர். இந்த உதய சங்கருடன் சிறுவயதிலே ரவிசங்கர் பாரிஸ் நகருக்குச் சென்று அங்கு சிறிதுகாலம் பிரெஞ்சுமொழியிலே கல்விபயின்றர். அக்காலத்திலே தான் இவருக்கு மிகுந்த தேசப்பற்றும் இந்தியக் கலையார்வமும் அதிகரித்தது. உதய சங்கருடைய நாட்டியப் படைப்புகளிலும் சேர்ந்து கலைவளர்க்கும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. உதயசங்கருடன் பல நாடுகளுக்குச் சென்று வந்த காலத்திலேதான் இவருடைய குருவாகிய அல்லாவுத்தீன் கானை இவர் சந்தித்து சித்தார் வாத்தியக் கல்வியைப் பயிலத் தொடங்கினர். ரவிசங்கருடன் கூடவே அல்லாவுத்தீனின் பிள்ளைகளாகிய அலி அக்பர் கானும் (இவரும் பின்னர் பிரசித்திபெற்ற ஒரு கலைஞரானர்) அன்னபூர்ணவும் இசைபயின்றனர். முறைப்படி தன் இசைக் கல்வியை முற்றுவித்த ரவிசங்கர், மரபுமுறைப்படி தன் குருவின் மகளாகிய அன்னபூர்ணவையே மணமுடித்தார். இதன்பின் 1939 இல் ஒரு [illegible] இசைக்கலைஞராகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்து வெற்றிப்படிகளில் ஏறிச்சென்றர்.

### வெற்றிமேல் வெற்றி

கடந்த நாற்பதாண்டுக்காலம் ரவிசங்கருடைய வாழ்க்கையில் வெற்றிக்குமேல் வெற்றிகிடைத்து ஓர் உலகக் கலைஞராக அவர் எழுச்சி பெற்றதைக் காணலாம். சித்தார் வாத்தியத்தைப் பொறுத்தமட்டில் அவருக்கு நிகர் அவரே என்றுதான் சொல்லலாம். இந்தியாவில் அவருக்குச் சங்கீத நாடக அக்கடமிப் பரிசு கிடைத்ததுபோல், அமெரிக்காவில் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் அவருக்கு அதிதிவிரிவுரையாளர்ப் பதவியும் கிட்டியது. இந்திய இசைமரபின் சிறப்பினை உலகுக்கு எடுத்துக்காட்டிய ஒருவராக இன்று அவர் விளங்குகிறர்.

### சித்தார்

இவருடைய வாத்தியமாகிய சித்தார் பழைய இந்திய இசைக்கருவியாகிய வீணையை ஒத்திருந்தாலும், வீணையைப் போன்று நீண்ட வரலாற்றையோ நுணுக்கமான வளர்ச்சியையோ உடைய ஒரு கருவி என்று சொல்லமுடியாது. வடஇந்தியாவில் இஸ்லாமியர் வருகையால் வளர்ந்த பண்பாட்டினைப் பிரதிபலிக்கும் ஒரு கருவியே சித்தார். இதனை பதினன்காம் நூற்றண்டின் தொடக்கத்தில் அலாவுத்தீன் கில்ஜி என்ற சுல்தானின் சபையில் பிரசித்திபெற்ற ஒரு கலைஞராக வாழ்ந்த அமீர் குஸ்ரு என்பாரே முதன்முதல் உருவாக்கி அறிமுகப்படுத்தினர். வடநாட்டார் வீணையைக்கைவிட, அதன் இடத்தை சித்தார் பிடித்துக் கொண்டது. அதனல், இன்று வடநாட்டிலே அது முதன்மையான நரம்புக்கருவியாக விளங்குகின்றது. அதனுடன்கூட வாசிக்கப்படும் கருவியாகத் தபேலா அமைந்தது. தென்னட்டில் மிருதங்கம்போன்று வடநாட்டில் ஹிந்துஸ்தானி இசைக்குத் தபேலா இன்றியமையாத தோற்கருவியாகும். ரவிசங்கருடன் கூடவந்து தபேலா வாசிக்கவிருக்கும் அல்லரக்ககான் இன்றைய இந்திய தபேலாக் கலைஞர்களுள் சிறப்பிடம் பெறும் ஒருவராவர்.

கர்நாடக இசைநிகழ்ச்சிகள் அடிக்கடி நடைபெறும் யாழ். நகரில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள ஹிந்துஸ்தானி இசை நிகழ்ச்சி ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

இந்த ஏற்பாட்டைச் செய்ததற்காக 'சிக்மா' பம்ப்ஸ்தயாரிப்பாளர்களான நாவற்குழி யுனைட்டெட் அக்ரோ. என்ஜினியரிங் ஸ்தாபனத்தினருக்கு நாம் நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளோம்.

Advt.

## பரீட்சார்த்த குழாய்க்கிணறு வெற்றி

(உடுப்பிட்டி)

உடுப்பிட்டித் தொகுதி கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் பரீட்சார்த்தமான முறையில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறு பெரும் வெற்றியளித்துள்ளது.

இம்மாதிரிக் கிராமத்தில் நீர்வளச் சபை நன்னீரைப் பெறுவதற்காகக் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு முன்னேடியாகப் பரீட்சார்த்தமாக இக் குழாய்க் கிணற்றை அமைத்துள்ளது.

இக்குழாய்க் கிணற்றின் மூலம் நாளொன்றுக்கு 5,000 கலன் நன்னீர் பெற்றுக் கொள்ள முடிகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது மாதிரிக் கிராமக் கட்டிட வேலைகளுக்கும் இக் குழாய்க் கிணற்று நீரே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

## வருடாந்தப் போட்டி

[புத்தளம்]

புத்தளம், உடப்பு தமிழ் மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று வித்தியாலய அதிபர் திரு. எம். சொக்கலிங்கசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். இராசதுரை பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார்.

## கன்பொல்லை கிராமத்தில் சிரமதானமூலம் வீதி அமைப்பு

(புலோலி)

கன்பொல்லை மாதிரிக் கிராமத்தில் நேற்று சுமார் 100 மாணவர்கள் சிரமதானமூலம் வீதி அமைத்தார்கள்.

சிரமதானத்தின்போது உடுப்பிட்டி எம். பி. திரு. கே. இராஜலிங்கம், யாழ். மாவட்ட உதவி வீடமைப்பு ஆணையாளர் திரு. இராமநாதன், உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு. குணரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய, பூரண இருதய கல்லூரி மாணவர் சிரமதானத்தில ஈடுபட்டனர். (க)

## நாளை ஆரம்பமாகும் பொன்விழா நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் பொன்விழா இன்றுசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது.

ஆயுர்வேத ஆணையாளர் திரு. பி. வி. வன்னிநாயகா விழாவை மங்கல விளக்கேற்றி ஆரம்பித்துவைப்பார். கல்லூரிக்கொடியை நிர்வாக அதிபர் டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதன் ஏற்றிவைப்பார். பொன்விழா மலரை வட இலங்கை வைத்திய சம்மேளனத்தின் அமைப்பாளர் முகாந்திரம் ஈ. பி. இராசையா வெளியிட்டுவைப்பார்.

பொன்விழாவின் இரண்டாம் நாளான புதன்கிழமை நிகழ்ச்சிகளை பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளும் வட இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் எஸ். பி. ஈ. இன்னசித்தம்பி ஆரம்பித்து வைப்பார்.

மூன்றும்நாள் நிகழ்ச்சிகளை பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெகநாதன் ஆரம்பித்து வைப்பார்.

இப் பொன்விழாவில் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் எஸ். சின்னத்தம்பி ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ள விசேட கருத்தரங்கில் வைத்தியத் துறையைச் சேர்ந்த பல பிரமுகர்கள் கலந்துகொள்கின்றனர் மூலிகைக் கண்காட்சி, ஏட்டுச் சுவடிகள் கண்காட்சி, கொழும்பிலுள்ள விஷவைத்திய சங்கத்தின் பாம்புக் கண்காட்சி ஆகியனவும் இப் பொன்விழாவில் இடம்பெறுகின்றன.

(பண்டத்தரிப்பு நிரு.)

## விபுலானந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லயத்தில் ஒருகோடி ரூபா செலவில் இசைக் கல்லூரி அமைக்கப்படும் என்று மேற்படி அமைச்சின் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## பகவான்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ற்றுக்கிழமை அதிகாலைஓம்காரமும், சுப்பிரபாதமும், அதனைத் தொடர்ந்து நகர சங்கீர்த்தனமும் பின்னர் தியானமும் நடைபெற்று முடிவடைய, காலை எட்டுமணிக்கு பஜனை ஏற்பாடாகியிருந்தது.

பஜனைக்காக பகவானின் படம், மலர்களால் அலங்கரிக்கப்பட்டுக்கொண்டிருந்தது.

சாயிதொண்டர் திரு. ஆர். துரைசிங்கமும், திருமதி தர்மா திருநாவுக்கரசுவும் பகவானின் திருவுருவப் படத்துக்கான அலங்காரத்தில் ஈடுபட்டிருந்தனர். சுவருடன் சாத்தப்பட்டிருந்த பகவானின்படத்துக்கு திருமதி தர்மா திருநாவுக்கரசு பூஎடுத்துக் கொடுக்க, திரு. துரைசிங்கம் அந்த அடுக்கு செம்பரத்தைப் பூவை எடுத்துச் சொருகினர்.

என்ன ஆச்சரியம்! பூ சாத்தப்பட்ட ஓரிரு நிமிடங்களுக்குள்ளாகவே அந்த அடுக்கு செம்பரத்தைப்பூ சுழலத் தொடங்கியது. பகவானின் திடீர் அற்புதம் கண்டு அங்கு கூடிநின்ற தொண்டர்கள் உணர்ச்சி வசப்பட்டு, உள்ளம் நெகிழ்ந்து கண்ணீர் மல்க, "சாயி ராம்" என்று பாடத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து அங்கு மிங்குமாக கூடிநின்ற தொண்டர்களும், அன்றைய நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவந்த அநாதைச் சிறுவர்களும் முண்டியடித்துக்கொண்டு அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தம்கொண்டு "சாயிராம்" என்று குரலெழுப்பினர்.

பஜனை முழுவேகத்தில் — உச்சநிலையில் நடைபெற்றது.

இத்தனைக்கும் அந்தப் பூ வட்டவடிவமாகவும் பின்னர் அடியார்களை ஆசிர்வதிப்பது போலவும் சுழன்றுகொண்டும், தலைஅசைத்துக்கொண்டும் ஆசிர்வாதம் வழங்கிக்கொண்டிருந்தது!

அங்கு குழுமியிருந்த அத்தனை பேருமே, பக்திப்பரவசத்தில் மூழ்கி, பகவானின் அற்புதத்தை எண்ணி ஆனந்தம் கொண்டு, பக்தி வெள்ளத்தில் மூழ்கித் துதித்தனர்!

இருபது நிமிடங்களுக்கு மேலாக 'மலர் விஜயம்' மேற்கொண்டு அங்குகூடிநின்ற அடியார்களுக்கு அற்புதக் காட்சி கொடுத்த பாபாவின் திவ்விய தரிசனத்தை நேரில் கண்ணுற்ற, பகவானின்நேரடி நியமன அங்கத்தவர்களான கொழும்பிலிருந்துவந்த திரு. சிவஞானலிங்கம், கலாநிதி திருமதி தர்மா திருநாவுக்கரசு, திருமதி கமலா முத்துக்கிருஷ்ண, திருமதி விமலா கிருஷ்ணபிள்ளை ஆகியோர் கூறியது:

"இன்றைய பயிற்சி முகாமை பாபா அங்கீகரித்துவிட்டார். அல்லாவிடில் அவர் இவ்விதமாக தரிசனம் அளித்திருக்க மாட்டார்" என்று தெரிவித்துக்கொண்டனர்.

20 நிமிட நேரத்துக்கு மேலாக பகவான் நிகழ்த்திய மலர் அற்புதம், அடியார்களுக்குக் கிடைத்த பேரின்பப் பாக்கியம் என்பதே அங்கு குழுமிநின்ற இருநூற்றுக்கும் அதிகமான தொண்டர்களின் அபிப்பிராயமாக ஒலித்தது.

--ஜி. எம்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவ்வேயில் [illegible] வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் மார்ச் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper in the General Post Office [illegible] EelanaduF, B. No. 49, Telegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org